செய்தி வெளியீடு எண்:1037 நாள்:03.11.2021

## செய்தி வெளியீடு

தேசிய தாழ்த்தப்பட்டோர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் திரு. அருண் ஹால்டர் அவர்கள் தலைமையிலான குழுவானது, மாநிலத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து அரசு தலைமைச் செயலாளர், முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., காவல்துறை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திரபாபு, இ.கா.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் கூடுதல் தலைமை செயலாளர் திரு.எஸ்.கே.பிரபாகர்,இ.ஆ.ப., தேசிய தாழ்த்தப்பட்டோர் நல ஆணையத்தின் இயக்குநர் முனைவர் சுனில் குமார் பாபு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் முதன்மைச் செயலாளர் முனைவர் க.மணிவாசன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் 03.11.2021 அன்று காலை 10.00 மணியளவில் தலைமைச் செயலகத்தில் ஆய்வினை மேற்கொண்டது. இவ்வாய்வுக் கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் முதன்மைச் செயலாளர் அவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மக்களின் நலனுக்காக அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் மற்றும் வன்கொடுமை தடுப்பு திருத்தச் சட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படும் முறைகள் குறித்து துணைத் தலைவர் தலைமையிலான குழுவிற்கு விரிவாக எடுத்துரைத்தார்கள்.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் நல ஆணையர், மேலாண்மை இயக்குநர், தாட்கோ மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9